தொழிலாளர் அரசுக் காப்பீட்டு கழகம்
कर्मचारी राज्य बीमा निगम
EMPLOYEES' STATE INSURANCE CORPORATION
தொழிலாளர் & வேலைவாய்ப்புத் துறை, இந்திய அரசு
श्रम एवं रोजगार मंत्रालय, भारत सरकार
Ministry of Labour& Employment, Govt. of India

क.रा.बी.नि
E.S.I.C.

सत्यमेव जयते

சார் மண்டல அலுவலகம்
उप क्षेत्रीय कार्यालय
SUB REGIONAL OFFICE
पंचदीप भवन, 1897, त्रिची रोड, रामनाथपुरम, कोयंबत्तूर-45
Panchdeep Bhavan, 1897, Trichy Road,
Ramanathapuram, Coimbatore – 641045

दूरभाष /Tele : 0422-2362301-329 फ़ैक्स/Fax : 0422-2315970 ई-मेल/Email : dir-kovai@esic.nic.in वेबसाइट/Website : www.esic.gov.in

## <u>செய்திக்குறிப்பு</u>

## <u>மறைந்த செல்வராஜ் சார்ந்தவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்குதல்</u>

கோயம்புத்தூர் தேக்கம்பட்டியில் உள்ள எம்/எஸ். ஐடிசி லிமிடெட் நிறுவனத்தில் கே.தேவேந்திரனின் மற்றும் பி.செந்தில்நாதன் ஒப்பந்தத்தின் கீழ் மறைந்த திரு. செல்வராஜ் என்பவர் உதவியாளராக பணியாற்றி வந்தார். அவர் கடந்த 7 ஆண்டுகளாக (2017 முதல்) ESI சட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட நபராக இருந்தார். 08.12.2023 அன்று மாலை 4.50 மணியளவில் பொருட்கள் ஏற்றும் இடத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அவர் திடீரென்று தொடர்ந்து வாந்தி எடுக்கத் தொடங்கினார். முதலுதவி அளித்த பிறகு சிங்காநல்லூரில் உள்ள இஎஸ்ஐ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 09.12.2023 அன்று அதிகாலை 5.47 மணியளவில் மாரடைப்பால் காலமானார்.

இ.எஸ்.ஐ. சட்டம், 1948 படி, 10 அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்களைக் கொண்ட எந்தவொரு நிறுவனமும்/தொழிற்சாலையும் இ.எஸ்.ஐ -இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். மாதம் ரூ.21,000/- வரை ஊதியம் பெறும் தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. சட்டப்படி சமூக பாதுகாப்பு பயன்கள் பெற உரிமையுள்ளவர்கள் ஆவர். மேலும் ஒரு காப்பீட்டாளர் பணியின் போது அல்லது சாலை விபத்தின் போது (பணிக்கு சொல்லும்போது அல்லது பணியிலிருந்து திரும்பும்போது) மரணம் அடைந்தால் இ.எஸ்.ஐ. திட்டத்தின் தொழில் சார்ந்த விபத்தாக கருதப்பட்டு, காப்பீட்டாளரை சார்ந்துளள குடும்பத்திற்கு சார்ந்தோர் உதவி பயன் வழங்கப்படும். இறந்த காப்பீட்டளாரின் மனைவி மற்றும் பெற்றோர்களுக்கு வாழ்நாள் முழுவதும், ஆண் குழந்தைகளுக்கு 25 வயது வரையும் பெண் குழந்தைகளுக்கு திருமணமாகும் வரையும் சார்ந்தோர் உதவி பயன் பகிர்ந்தளிக்கப்படும்.

வேலையின் போது இந்த சம்பவம் ஏற்பட்டதாலும், இறந்தவர் இ.எஸ்.ஐ திட்டத்தின் கீழ் காப்பீட்டாளராக இருந்ததாலும், இ.எஸ்.ஐ கார்ப்பரேஷன் இதை தொழில் சார்ந்த இறப்புகளில் ஒன்றாக கருதி மறைந்த செல்வராஜ் குடும்பத்திற்கு சார்ந்தோர் உதவி பயன் வழங்கியது. மறைந்த செல்வராஜின் மனைவி அம்சவேணிக்கு மாதம்தோறும் ஓய்வூதியமாக ரூ.11,774/- பெறுவார்கள்.

கோயம்புத்தூர் சார் மண்டல அலுவலகத்தின் திரு. இசக்கி சிவா. இ, துணை இயக்குநர், மற்றும் மேட்டுப்பாளையம் கிளை அலுவலக மேலாளர் திரு. ஸ்ரீராஜ்சிவசங்கர். வ, 26.07.2024 அன்று மறைந்த செல்வராஜ் குடும்பத்திற்கு ஒப்பந்ததாரர் திரு. தேவேந்திரன் முன்னிலையில் சார்ந்தோர் உதவி பயன் பெறுவதற்கான அனுமதி ஆணை மற்றும் ரூ.77,840/- (எழுபத்தேழாயிரத்து எண்ணூற்று நாற்பது மட்டும்) வழங்கப்பட்டது .

x-x-x-x-x